**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029145

1. District : சேலம் | PS: ஊ.த.க. பிரிவு சேலம் | Year: 2017 | FIR No: 8/AC/17 | Date: 17.11.2017
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: கு.வி.மு.ச — Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 16.11.2017 — Date to நாள் வரை :
Time Period நேர அளவு : — Time from நேரம் முதல் : 19.00 மணி — Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.11.2017 — Time நேரம் : 11.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL VII — Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக திடீர் சோதனையின் போது கிடைக்கப் பெற்ற தகவல் - மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 3 கி.மீ தென்கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address முகவரி: பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி சேலம் மேயர் மதுரைப் பிள்ளை அரங்காட்சி பேருந்து நிலைய மாடிக்கட்டிடத்தின் தரை தளம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திருமதி. N. சோமசி
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : திரு. A. செந்தில்வேல்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 07.05.1964
(d) Nationality நாட்டினம் : இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation தொழில் : ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி A. வசந்தா க/பெ ஆறுமுகம் விற்பனையாளர், மளிகை பிரிவு பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி
2) திரு. A. சிவக்குமார் த/பெ ஆறுமுகம் மேலாளர், பிரிவு மளிகை மற்றும் சுய சேவை பிரிவு, பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9.* Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible signature] 17/11/17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[illegible signature] 17/11/17
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17. 11. 2017 at 15.00 hrs.

Name: பெயர் ……………………… [illegible]
Rank: நிலை …………… 0 No: எண் ……… 0
[illegible]

* GCR 248-34(Type 3) ...

சமர்ப்பிக்கப்படுகிறது

**17.11.2017**ம்தேதி பிற்பகல் 11 மணிக்கு திருமதி.நா.கோமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம் மாவட்டம் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆஜராகி கொடுத்த கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு.

அனுப்புதல், திருமதி.நா.கோமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம். பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அய்யா, சேலம் மாநகரம், பழைய பேருந்து நிலையத்தின் கிழக்கில் உள்ள சேர்மேன் மதுரைப்பிள்ளை நகராட்சி உந்து வண்டி நிலைய முதல் மாடியுடன் கூடிய கட்டிடத்தின் தரைதளத்தில் வடக்கு பகுதியில் இயங்கி வரும் பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடியின் மளிகைப் பிரிவில் பணிபுரியும் அலுவலர்கள் மளிகை பொருட்களை மொத்தமாக வியாபாரிகளிடம் கொள்முதல் செய்யும்போது அவர்களிடம் கமிஷனாக பெரும் அளவில் லஞ்சம் பெறுவதாகவும் அதனால் பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடியின் வியாபாரம் பாதிக்கப்பட்டு சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்துவதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் **16.11.2017**ம் தேதி இரவு **19.00** மணி முதல் இரவு **23.00** மணி வரை நான், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.ப.செல்வகுமார் மற்றும் சேலம் ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து மேற்படி பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடியின் மளிகைப் பிரிவை தீடீர் தணிக்கை மேற்கொண்டோம். இந்த தணிக்கையின்போது மேற்படி மளிகைப் பிரிவில் இருந்த திருமதி.வசந்தா, விற்பனையாளர் அவர்களை இன்றைய விற்பனை குறித்தும், தொகை இருப்பு குறித்தும் விசாரித்தபோது அவர் இன்று **16.11.2017** ஆம் தேதி காலை முதல் தற்போது வரை ரூ.700/–க்கு மட்டுமே மளிகை பொருட்கள் சில்லறையாக விற்பனை செய்யப்பட்டதாகவும், அந்த தொகை ரூ.700/– பணப்பெட்டியில் (cash box) வைத்துள்ளதாகவும் சொன்னார். அவருக்கு முன்பிருந்த இரும்பு மேஜைக்கு அருகில் முன்புறம் தரையில் வைக்கப்பட்டிருந்த ஒரு இரும்பு பணப்பெட்டியில் சோதனை

செய்தபோது அதில் ரூ.700/– இருந்தது தெரியவந்தது. பிறகு நான் வேறு ஏதாவது பணம் வைத்துள்ளீர்களா என்று திருமதி.வசந்தா அவர்களிடம் கேட்க வேறு ஏதும் பணம் இல்லை என்று தெரிவித்தார். பின்னர் நானும், தணிக்கை குழுவினரும் திருமதி.வசந்தாவின் இருக்கைக்கு முன்பிருந்த இரும்பு மேஜைக்கு வடபுறமாக இருந்த மற்றொரு இரும்பு மேஜையில் தேடுதல் மேற்கொண்டபோது அந்த இரும்பு மேஜையின் வலது பக்க மேல் டிராயரில் கத்தையாக ரூபாய் நோட்டுகள் இருந்தன. அவைகளை என்னுடன் வந்த ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.செல்வகுமார் மூலம் எண்ணிப்பார்த்ததில் அதில் ரூ.1,20,000/- இருந்தது. மேலும் மேற்படி மேஜையின் வலதுபக்க கீழ் டிராயரில் சோதனை செய்து பார்த்ததில் அதிலும் கத்தையாக ரூபாய் நோட்டுகள் இருந்தன. அதில் ரூ.39,650/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து நானும், ஆய்வுக்குழு ஆய்வாளரும் விற்பனையாளர் திருமதி.வசந்தா அவர்களிடம் விசாரித்தபோது அவர் இன்று விற்பனை செய்யப்பட்ட தொகை ரூ.700/–ஐ தவிர மீதி தொகையானது தங்களது மளிகைப்பிரிவிலிருந்து மாணவர் நல விடுதிகள், அம்மா உணவகங்கள், கோயில்களில் அன்னதான திட்டம் போன்றவைகளுக்கு கடன் முறையில் மளிகை பொருட்களை வழங்கும்போது அவர்கள் கேட்கும் பொருட்களின் அளவுகளில் இருந்து சுமார் 30 சதவீத பொருட்களை குறைத்துக்கொண்டு 70 சதவீத பொருட்களை மட்டும் கொடுத்துவிட்டு 100 சதவீத பொருட்களையும் வழங்கியதாக பில் வழங்கியும், வழங்காமல் நிறுத்தப்பட்ட 30 சதவீதத்திற்குரிய பொருட்களை தனி வியாபாரிகளுக்கு பண்டக சாலையிலிருந்து உண்மையான விற்பனை விலையிலிருந்து சுமார் 30 சதவீதம் விலைகுறைத்து விற்பதாகவும், பிறகு மேற்படி வகையில் கிடைக்கும் 70 சதவீத விலைக்குண்டான தொகையை மேற்படி தனி வியாபாரிகளிடமிருந்து பெற்று தானும், மேலாளர் திரு.சிவக்குமார் மற்றும் சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர்கள் அம்மா உணவக பொறுப்பாளர்கள், அன்னதான திட்ட பொறுப்பாளர்கள் ஆகியோர்களும் பிரித்து எடுத்துக் கொள்வதாகவும் மேலும் தங்களது சிறப்பங்காடியின் பண்டகசாலையில் (Godown) இருப்பில் இல்லாத பொருட்களை வெளி மார்க்கெட்டில் உள்ள மொத்த வியாபாரிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யும்போது அவர்களும் கொள்முதல் தொகையில் 4 முதல் 6 சதவீதம் வரை கமிஷனாக கொடுப்பார்கள் என்றும், அந்த தொகையினையும் தானும்,

மேனேஜர் திரு.சிவக்குமாரும் பிரித்து எடுத்துக் கொள்வதாகவும், இவ்வாறு இன்று வெளிமார்க்கெட் வியாபாரிகள் சிலர் கமிஷன் தொகைகளை கொண்டுவந்து கொடுத்ததாகவும், அதை மேற்படி மேஜையின் டிராயர்களில் வைத்திருந்ததாகவும் கூறினார். மேற்படி தொகைகள் கமிசனாக பெறப்பட்டதால் அந்த தொகைகள் மொத்தம் ரூ.1,59,650/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி நடவடிக்கையின் போது மேலும் மேற்படி தொகைகள் இருந்த இரும்பு டேபிளின் கீழ் டிராயரில் தேடுதல் மேற்கொண்டபோது அதில் திருமதி.வசந்தா மற்றும் அவரது கணவர் பெயரில் ஏலச் சீட்டு போடும் சீட்டு புத்தகங்கள் 6 இருந்தன. மேலும் திருமதி.வசந்தாவின் இருக்கையின் முன்பிருந்த Cash Memo என்றும் Pilot என்றும் பிரிண்ட் செய்யப்பட்ட Cash Memo புத்தகம் ஒன்று 24.5.2017 முதல் 14.11.2017 வரை எழுதப்பட்டும், அதற்கு பின்பும் ஒரு தேதியிடாத பில்லும் இருந்தது. இதை பற்றி விசாரித்தபோது இது வரிசை எண் இல்லாமல் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக தன்னால் தனியாக பராமரிக்கப்படும் Cash book என்றும் தெரிவித்தார். மேலும் வியாபாரிகளிடம் மளிகை பொருட்களை கொள்முதல் செய்யும் விபரங்கள் பதிவு செய்துள்ள இரண்டு குயர் நீள நோட் புத்தகம் ஒன்றும், அலுவலக வருகைப்பதிவேடும், பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி மளிகை பிரிவின் விற்பனை ரொக்க ரசீது புத்தகம் ஒன்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த தணிக்கையின்போது திரு.N.விக்னேஷ் பெருமாள் என்ற தனிநபர் மே 2017 முதல் தற்காலிகமாக வேலை செய்துவருவதாகவும் தெரிவித்தார். இந்த விவரங்கள் இந்த திடீர் தணிக்கையின்போது தயார்செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் ந.க.எண். ஆ.கு.அ. எண்.63/2017 நாள்.17.11.2017 மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்ட விற்பனையாளர் திருமதி.வசந்தா, மேலாளர் திரு.சிவக்குமார், வசந்தாவின் உதவியாளர் திரு.விக்னேஷ் பெருமாள் மற்றும் கலாசி ஏழுமலை ஆகியோரின் வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,59,650/– மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை இத்துடன் இணைத்து அனுப்புயுள்ளேன். இந்த நிகழ்வுகள் குறித்து உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd.(xxxxx),

ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம்.

Sir,

Received the complainant and the enclosures and registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.8/AC/2017 u/s.102 CrPC and Sec.13(2) r/w.13(1)(d) of PC Act, 1988 on 17.11.2017 at 12.00 hrs and took up investigation. (xxxxxx) Sd/-S.Chandramouli, 17.11.2017, Dy.Supdt. of Police, Vigilance and Anti-Corruption, Salem District.

Original FIR along with the Original typed complaint of Tmt.N.Gomathi, Inspection Cell officer, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Hon'ble Special Court, Trial cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR submitted to the Director, V&AC., Chennai-16.

17/11/17

Deputy Superintendent of Police
Vigilance and Anti-Corruption
SALEM-